OS 334/13 திரு.ஜெயன் வாதீ தரப்பு சாட்சி 1 15.6.2023

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி -

என்னுடைய தாய் 100 நாள் வேலை திட்டத்திற்கு எத்தனை வருடங்களாக செல்கிறார்கள் என்றால் சுமார் 5, 6 வருடமாக செல்கிறார்கள். தற்போதும் அந்த வேலைக்கு அவர்கள் செல்கிறார்கள். தாவா சொத்து கட்டுவதற்கு நான் கடன் பெற்று கொடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் தான் சொத்தின் மூல பத்திரங்கள் என் தாயாரிடமே உள்ளது என்றால் சரிதான். இந்த வழக்கை நான் என் தாயார் எனக்கு ஆதரவாக செட்டில்மெண்ட் எழுதி வைத்துள்ளதால் தாவா சொத்தில் எனக்கு உரிமை வந்துவிட்டது என்ற காரணத்தினால் போட்டுள்ளேன். வா.சா.ஆ.2 செட்டில்மெண்ட் ஆவணத்தில் என் தாய் நான் மூத்த மகன் என்பதால் அன்பு மற்றும் பாசத்தால் எழுதி வைத்ததாக வாசகம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

மேற்படி வாசகம் கடன் வாங்கி கொடுப்பதற்காக தான் வா.சா,ஆ.2 ல் இடம்பெற்றுள்ளது என்றால் சரியல்ல. காலி மனையும் அதில் கட்டப்பட்ட கட்டிடமும் அதனுடன் இணைந்த கடைகளும் என் அம்மாவின் பணத்திலிருந்து தான் கட்டப்பட்டது என்றால் சரிதான். அதனால் அவர்கள் தான் அதிலிருந்து வரக்கூடிய வாடகையை பெறுவார்கள் என்றால் சரிதான். என் தாயார் ஓய்வூதியமாக ரூ.13,000/- மாதம் பெறுகிறார். எனக்கு வங்கியில் கருணை அடிப்படையில் வேலை கிடைத்ததால் என் தாயாா ஓய்வூதியம் ரூ.5000/- தான் என்று சொன்னால் சரியல்ல. என் தாயாருக்கு மாதா மாதம் செலவிற்கு பணம்கொடுக்கிறேனா என்றால் இல்லை. 2010ல் திருமணம் நடைபெற்று அதன் பின்பு என்னுடைய மனைவிக்கும் என்னுடைய தாயாருக்கும் பிரச்சனை ஏற்பட்டதால் நாங்கள் தனிக்குடித்தனம் செய்ய என் அம்மா கூட்டு குடும்பத்திலிருந்து வெளியே வந்துவிட்டோம் என்றால் சரிதான்.

என் அம்மாவின் பெயரில் உள்ள சொத்தை அவர் யார் பெயருக்கும் எழுதி வைக்கலாம் என்றால் சரிதான். கருணை அடிப்படையில் என் தந்தையின் வேலை தான் எனக்கு கிடைத்தது என்றாலும் தற்போது என் தம்பி வேலையில்லாமல் இருக்கிறார் என்றாலும் சரிதான். வா.சா,ஆ,2 2005ல் என்பெயரில் என் தாய் எழுதி வைக்கும்போது என் தம்பிபெயரில் ஏதேனும் சொத்து என் தாயாரால் எழுதிவைக்கப்பட்டதா என்றால் வாங்கிகொடுத்தார்கள். அந்த சொத்து

ஊனமாஞ்சேரியில் 1 கிரெளண்ட் அளவில் என் தம்பிக்கு வாங்கி கொடுத்தார்கள். ஒரு சொத்தை ஏமாற்றி ஆவணம் மூலம் பெற்றால் அந்த ஆவணம் செல்லாது என்றால் சரிதான். நான் கட்டுமானம் செய்வதற்கு கடன் பெற்று தருவதாக சொன்னதால்தான் என் தாயாா் என் பெயரில் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார், அதன் பின்னர் கடன் பெற்று தராமல் ஆவணங்களை திருப்பி என் தாயாரிடமே ஒப்படைத்து விட்டேன் அதனால் நான் என் தாயரை ஏமாற்றி தான் செட்டில்மெண்ட் பத்திரத்தை பெற்று தற்போது தாவா சொத்தில் உரிமை கொண்டாடுகிறேன் என்றால் சரியல்ல. அதனால் தான் எனக்கு எந்த உரிமையும் தாவா சொத்தில் எழவில்லை என்று கருகி கூட்டு குடும்பத்திலிருந்து தனிக்குடித்தனம் சென்றுவிட்டேன் என்றால் குடும்பத்தில் பிரச்சனை என்பதால் தனியே மனைவியுடன் சென்றுவிட்டேன். அதனால் தாவா தள்ளுபடிக்குரியது என்று சொன்னால் சரியல்ல.